**செய்தி வெளியீடு எண்: 741** **நாள்: 15.10.2018**

# செய்தி வெளியீடு

**திண்டுக்கல் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தோட்டக்கலை அறிவியலில் ஈராண்டு பட்டயப் படிப்பிற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.**

*****

தோட்டக்கலைத் துறையில் ஈராண்டு பட்டயப் படிப்பு படித்த மாணவர்களுக்கு சிறந்த வேலை வாய்ப்புகள் உள்ளன. இப்பட்டயப்படிப்பினை ஊக்குவிக்கும் பொருட்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிவிப்பின்படி, நடப்பு ஆண்டு முதல் கிருஷ்ணகிரி மாவட்டம் தளியில் செயல்பட்டு வரும் தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்திலும், திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரத்தில் இயங்கி வரும் காய்கறி மகத்துவ மையத்திலும் ஆண்டுதோறும் ஒவ்வொரு மையத்திலும் 50 மாணவர்களுக்கு பயிற்றுவிக்கப்பட உள்ளது.

மேல்நிலை (பிளஸ் 2) தேர்வில் உயிரியல், தாவரவியல், விலங்கியல், வேளாண்மை கோட்பாடு மற்றும் செயல்முறை I மற்றும் II, பயிர் உற்பத்தி கோட்பாடு மற்றும் செயல்முறை I மற்றும் II ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை விருப்ப பாடமாக படித்து தேர்ச்சி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். 01.06.2018ம் நாளன்று பின்தங்கிய, மிகவும் பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் 25 வயதிற்கு மேற்படாமலும், மற்ற பிரிவினர் 22 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் 08.10.2018 முதல் 31.10.2018 முடிய அனைத்து வேலை நாட்களிலும் காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரை மேற்கண்ட மையங்களில் விற்பனை செய்யப்படும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 31.10.2018 அன்று மாலை 5.45 மணிக்குள் தோட்டக்கலை துணை இயக்குநர், தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம், கூட்டூர் கிராமம், நெல்லுமாறு சாலை, தளி – 635118, கிருஷ்ணகிரி மாவட்டம் அல்லது தோட்டக்கலை துணை இயக்குநர்,மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், திண்டுக்கல் – 624 004 என்ற முகவரிக்கு வந்தடைய வேண்டும். நவம்பர் முதல் வாரத்தில் அந்தந்த மையங்களில் மதிப்பெண் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு இணையதளம் மூலம் தெரிவிக்கப்படும்.

மேலும் விவரங்களுக்கு தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் இணையதளம் – http://tnhorticulture.tn.gov.in –த்தை அணுகவும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**